## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.207-2016** **LW.6** **PW. 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சுரேஷ்குமார் | Father / Husband Name | பாலக்கிருஷ்ணன் |
| Village | பெ.பூவனூர் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 43 |
| | | Time | 12.50 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 29.06.2026 நாளாகிய இன்று திரு..M.ஆசிப் முகமது பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் பெ.பூவனூர் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாய வேலைசெய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை பெண்ணாடம் போலிஸார் ஏதோ பிரச்சனை என்று வந்தார்கள் என்னிடம் சாட்சிகையெழுத்துகேட்டார்கள் நான் சாட்சிகையெழுத்துபோட்டேன். 01–06–2014 தேதியிட்ட பார்வை மகசர் **அ.சா.ஆ.3** ஆகும். போலிஸார் என்னை விசாரணைசெய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பார்வை மகசரில் என்னுடன் சேர்ந்து கையொப்பம் போட்ட நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் ? சரிதான். நான்பார்வை மகசரில் எத்தனை மணிக்கு எங்கே வைத்து கையெழுத்துபோட்டேன் என்று தெரியாது என்றால் ? சரிதான். நான் இதற்கு முன்பு இந்நீதிமன்றத்திற்கு எதிரிகள் குடும்பம் மேல் உள்ள வழக்கிற்காக இரண்டு வருடத்திற்கு முன்பு சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் ? சரிதான்.

2. என்னை பெண்ணாடம் காவல் நிலையத்தில் வைத்துதான்போலிஸார் விசாரித்தார்கள் என்றால் ? சரிதான். தற்போது சாட்சி தானாக முன்வந்து தன்னை காவல் விசாரிக்கவில்லை என்று கூறுகிறார். நான் வெள்ளைபேப்பரிதான் கையொப்பம் இட்டேன். அந்த வெள்ளை பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், போலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்கத்தான் கையெழுத்திட்டேன் என்று சொன்னால் ?

சரியல்ல. நான் போலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் ? சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI